

# பனிமயம்

ஜூலை 2024

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்புமக்களே!

பனிமய அன்னையின் பேராலயப் பங்கில் பங்குத் தந்தையாக பொறுப்பேற்று முதல் முறையாக “பனிமயம்” மாத இதழின் வழியாக தங்களை சந்திப்பதில் மகிழ்கிறேன். பொறுப்பேற்ற நாளிலிருந்து நீங்கள் எனக்காக செய்கின்ற ஜெபங்களுக்கும், காட்டுகின்ற அன்பிற்கும், கொடுக்கின்ற ஒத்துழைப்பிற்கும் நன்றிகள். “மாதாவுக்காக, மக்களுக்காக” என்கின்ற விருதுவாக்கோடுதான் பேராலயப் பங்கிற்குள் நான் அடியெடுத்து வைத்திருக்கிறேன். இந்த விருதுவாக்கை நிறைவேற்றுகின்ற விதமாக நல்லமுறையில் நான் பணியாற்ற உங்களுடைய மேலான ஒத்துழைப்பை நாடுகிறேன்.

மாதாவை நோக்கிய என் ஜெபமெல்லாம் “என் மக்கள் நன்றாயிருக்க மன்றாடுங்கள் அம்மா” என்பதுதான். எனவே அன்பு மக்களே, நீங்கள் உடல் உள்ள சுகத்தோடும், ஆன்ம பலத்தோடும் வாழ வாழ்த்துகிறேன். “உமது மனம் விரும்புவதை அவர் உமக்குத் தந்தருள்வாராக! உம் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவாராக” (திபா 20:4) என்பதுபோல உங்கள் அனைவரின் விருப்பங்களையும், திட்டங்களையும் பனிமயத் தாயின் பரிந்துரை வழியாக ஆண்டவர் நிறைவேற்றிட வேண்டுகிறேன்.

இம்மாதம் 25ஆம் தேதி கொடிப் பவனியோடு நமது தாயின் திருவிழாவைத் தொடங்குகின்றோம். 11 நாட்களும் பேராலய வளாகமும், ஏன் தூத்துக்குடியே விழாக்கோலம் பூண்டிருக்கும். தாயின் விழாவைக் கொண்டாடுவதில் பிள்ளைகள் எவ்வளவு ஆர்வமாய் ஆசையாய் உள்ளார்கள் என்பதை இந்நாட்களில் கண்கூடாய்க் காணமுடியும். மகிழ்ச்சியாய் கொண்டாடுவோம் மக்களே. ஆனால் இரண்டு காரியங்களை மட்டும் மறந்துவிடாதீர்கள். திருச்சபை / இயேசு நமக்கு மாதாவையும் மற்றப் புனிதர்களையும் தந்திருப்பது அவர்கள் தம் முன்மாதிரிகையை நம் வாழ்வில் நாம் கடைப்பிடித்து வாழ்வதற்காகவே. அநேக இடங்களில் நாம் பார்ப்பது மாதாவின்/ புனிதர்களின் பரிந்துரையை நாடுகிறோம், பாதுகாவலுக்காய் மன்றாடுகிறோம். ஆனால் புனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையை பின்பற்றத் தவறிவிடுகின்றோம். எனவே கொண்டாட்டங்களோடு நிறுத்திவிடாமல் வாழ்க்கை மாற்றங்களுக்கு முதலிடம் கொடுப்போம். இரண்டாவதாக எந்த ஒரு விழாவும் நமக்குள் ஒற்றுமையை அதிகரிக்கவேண்டும். நமக்குள் எந்த ஒரு பிளவையும், பிரிவையும் அது ஏற்படுத்திவிடாதபடி கவனமாய் இருக்கவேண்டும். “ஒற்றுமையே பலம்” “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்னும் முதுமொழிகளை மறந்துவிடாதீர்கள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம். இறையாட்சி மலர இணைந்தே பயணிப்போம்.

அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 25 தாரகை 11

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
புனித பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
புனித பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### நோயாளிகளுக்கான மேய்ப்புப் பணிப் பராமரிப்புக்காக

நோயில் பூசுதல் அருளடையாளத்தைப் பெறுபவர்களுக்கும் அவர்களின் அன்புக்குரியவர்கள் அனைவருக்கும், என்றென்றும் அதிகமான பரிவும் எதிர்நோக்கும் நிறைந்த, காணத்தக்க ஓர் அடையாளமாக ஆண்டவரின் ஆற்றல் விளங்கிட நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. இறைவனின் திருச்சமூகம் . . . . . . . . . . . . . . . 6
கலாபன் வாஸ்

3. கண்காட்சி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 8
முனைவர் .சி. ஜாக்சன்

4. பனிமய சாட்சியங்கள் . . . . . . . . . . . . . . . . . 11

5. அன்னை ஓர் ஆலயம் . . . . . . . . . . . . . . . 12
முனைவர் ஞா. லாரன்ஸ்

6. ஜில்லென்று விழுந்த பனித்துளி . . . . . . . . . . 14
ம. வெனான்சியுஸ்

7. கார்மல் மலை புனித கன்னி மரியா . . . . . . . . 16
ரோஸ் சேவியர்

8. அம்மா! . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18
ஜோ. ரெஜினா கிரகோரி

9. விவிலியப்போட்டி. . . . . . . . . . . . . . . . . . . . 19

10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . . 20

மரியன்னையின் திருப்பெயர்கள் 3

# கிறிஸ்துவின் அன்னை



"மரியன்னையின் மன்றாட்டு மாலை"யில் அன்னை மரியாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு பெயர் கிறிஸ்துவின் அன்னை. இயேசுவின் தாயான மரியாவைக் கிறிஸ்துவின் அன்னை என்று அழைப்பதும் பொருத்தம்தானே!

"இயேசு" என்னும் பெயருக்கும், "கிறிஸ்து" என்னும் பெயருக்கும் என்ன வேறுபாடு? "இயேசு" என்பது அவருக்குக் கொடுக்கப்பட்ட (எபிரேயப்) பெயர். அதற்கு "மீட்பர்" என்பது பொருள் (மத் 1:21). "கிறிஸ்து" என்பது அவரது பணியைக் குறித்துக் காட்டும் கிரேக்கப் பெயர். அதற்கு "அருள்பொழிவு செய்யப்பட்டவர்" என்பது பொருள். "மெசியா" என்னும் எபிரேயச் சொல்லின் கிரேக்க மொழியாக்கமே கிறிஸ்து (யோவா 4:25).

யாருக்கும் கிடைக்காத ஒரு பேறுதான் மீட்பராம் இயேசுவுக்கே தாயாகும் பேறு. எனவேதான், இயேசுவைப் பாராட்ட விரும்பிய ஒரு பெண் "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" (லூக் 11:27) என்று அன்னை மரியாவையும் சேர்த்தே வாழ்த்தினார்.

ஒரு தாய் எப்படித் தம் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்பதற்கு அன்னை மரியா தம் ஒரே மகன் இயேசுவை எப்படி வளர்த்தார் என்பது மிகப் பெரும் சான்றாக அமைந்துள்ளது. அவரிடமிருந்து பிள்ளைகளை வளர்ப்பது என்னும் பாடத்தை நம் பெற்றோர், குறிப்பாக தாய்மார்கள், கற்றுக்கொள்ளலாம்.

இயேசுவின் தாயான மரியா அவருக்கு ஓர் ஆசிரியையாகவும் இருந்து பலவற்றைக் கற்றுத் தந்தார். அவற்றுள் ஒன்றுதான் கேள்வி கேட்கக் கற்றுக்கொடுத்தது. பிள்ளைகள் அறிவாற்றலிலும், தன்னம்பிக்கையிலும் வளர வேண்டும் என்றால், அவர்களிடம் கேள்விகள் எழுப்பும் பழக்கம் இருக்க வேண்டும். தாமஸ் ஆல்வா எடிசனின் தாய் அவரைப் பள்ளியில் ஆசிரியரிடம் கேள்விகள் எழுப்ப ஊக்குவித்தாராம். அதன்வழியேதான், அவர் அமெரிக்காவின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாளராக மாறினார். எடிசனுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இயேசுவை அவர் தாய் கேள்விகள் எழுப்ப ஊக்குவித்தார் என்பது வியப்பான தகவல்.

தமது பன்னிரண்டு வயதில் எருசலேம் கோவிலில் இயேசு "போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும், அவர்களிடம் **கேள்விகளை எழுப்பிக்கொண்டும் இருந்தார்.** அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்துகொள்ளும் திறனையும், அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப்போயினர்" (லூக் 2:46-47) என்று லூக்கா பதிவுசெய்துள்ளார்.

நாசரேத் என்னும் கிராமத்துச் சிறுவன் எருசலேம் என்னும் பெருநகரில் போதகர்களிடம் கேள்விகள் எழுப்பினார் என்றால், அது ஒரு நாளில் வந்ததல்ல. தமது சொந்த ஊரிலேயே சான்றோர் சொல்வதைக் கேட்கும் பழக்கமும், அவர்களிடம் கேள்விகள் எழுப்பும் பழக்கமும் இருந்திருக்க வேண்டும். அந்த ஆர்வத்தையும், தன்னம்பிக்கையையும் அன்னை மரியாதான் அவருக்குத் தந்தார் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியுமா?

கிறிஸ்துவின் அன்னையாம் மரியாவைப் போலவே எல்லாத் தாய்மார்களும் தம் பிள்ளைகளை வளர்ப்பார்களாக! ★



4

# திருஅவையின் அன்னை

கடந்த 11.02.2018 லூர்து அன்னையின் விழா அன்று திருத்தந்தை பிரான்சிஸ் "அன்னை மரியா திருஅவையின் தாய்" என்னும் பெயரில் ஒரு விழாவைத் (Memorial Feast) திருவழிபாட்டுக் காலண்டரில் இணைத்தார் என்பது பலருக்கும் தெரியாத ஒரு தகவல். கடந்த ஏழு ஆண்டுகளாக பெந்தகோஸ்து பெருவிழாவுக்கு அடுத்த நாளில் "மரியா திருஅவையின் தாய்" என்னும் விழா (நினைவு) கொண்டாடப்பட்டு வருகிறது.

இருப்பினும், திருஅவையின் தொடக்க காலத்திலிருந்தே மரியா "திருஅவையின் தாய்" என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தார் என்பதை நமது வரலாறு சுட்டிக்காட்டுகிறது. தொடக்கக் காலத்தில் இருந்தே மரியா அனைத்து சீடர்களின் தாயாகவும், விளைவாகத் திருஅவையின் தாயாகவும் கருதப்பட்டார். சிலுவையில் தொங்கிய இயேசு யோவானிடம், "இவரே உம் தாய்' என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவா 19:27) என்பது இதற்கான ஒரு விவிலிய ஆதாரம்.

மேலும், சீடர்கள் "அனைவரும் இயேசுவின் தாய் மரியாவோடு இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள்" (திப 1:14) என்னும் பதிவும் தொடக்கத் திருஅவையில் மரியாவின் பங்கை எடுத்துரைக்கிறது.

திருஅவை வல்லுநர்களுள் ஒருவரான புனித அகுஸ்தினார் "மரியா கன்னியும், தாயும். நம் திருஅவையின் தாய். திருஅவையின் மாதிரி. திருஅவையின் ஓர் உறுப்பினர்" என்று போதித்தார். திருத்தந்தை புனித லியோ (பெரிய சிங்கராயர்) மரியா இயேசுவின் தாயானதால், அவரது மறையுடலாம் திருஅவைக்கும் தாயாகிறார் என்று போதித்தார்.

இப்பெயர் அன்னை மரியாவின் பின்வரும் பணிகளைக் குறித்துக் காட்டுகிறது.

1. திருஅவையின் தலையான கிறிஸ்துவின் தாய் என்பதால், மரியா திருஅவைக்கும் தாயாக மாறுகிறார்.
2. இயேசுவின் சீடர்கள் அனைவரிலும் மரியாவே முதற் சீடராக விளங்குகிறார். எனவே, அவரே திருஅவையின் முதல் உறுப்பினராகவும் இருக்கிறார்.
3. திருஅவையின் உறுப்பினர்களான இயேசுவின் சீடர்களைப் பாதுகாக்கும் பணியை மரியா ஆற்றுகின்றார்.

உரோமையின் புனித பேதுரு சதுக்கத்தில் "அன்னை மரியா திருஅவையின் தாய்" என்னும் ஓவியம் காணப்படுகிறது. அதற்குப் பின்னால் ஒரு சுவையான நிகழ்வு உள்ளது. 1980ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல் பல்கலைக்கழக மாணவர்களோடு உரையாடல் நடத்தியபோது, ஓர் இளைஞன் "புனித பேதுரு சதுக்கத்தில் 162 புனிதர்களின் திருஉருவங்கள் உள்ளன. ஆனால், அன்னை மரியாவின் திருவுருவம் இல்லையே" என்று கூறினான். அதைத் தொடர்ந்து, அருளாளர் ஆல்வாரேயின் முன்னெடுப்பில் உருவாக்கப்பட்ட "மரியா திருஅவையின் அன்னை" என்னும் ஓவியம் 1981ஆம் ஆண்டு திருத்தந்தையால் அர்ச்சிக்கப்பட்டது.

நாம் நல்ல சீடர்களாக வாழ அன்னை மரியா நமக்காகப் பரிந்துரைக்கிறார்.



அருள்பணி. குமார்ராஜா



# இறைவனின் திருச்சமூகம்

"ஒரு நாள், இரு விலை மாதர் அரசர் முன்னிலையில் வந்து நின்றனர். அவர்களுள் ஒருத்தி, "என் தலைவரே! இந்தப் பெண்ணும் நானும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். அந்த வீட்டில் அவள் என்னுடன் இருந்தபோது நான் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தேன். என் குழந்தை பிறந்து மூன்று நாள் ஆன பின், அவளும் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்த வீட்டில் எங்கள் இருவரைத் தவிர வேறு யாரும் இல்லை. இவள் இரவில் தூங்கும்போது தன் மகன் மீது புரண்டுவிட்டதால் அவன் இறந்து போனான்.

அவள் நள்ளிரவில் எழுந்து உம் பணிப் பெண்ணாகிய நான் தூங்கிக் கொண்டிருக்கையில், என்னருகில் கிடந்த என் மகனை எடுத்துத் தன் நெஞ்சருகில் வைத்துக்கொண்டு, இறந்துவிட்ட தன் மகனை என் நெஞ்சருகில் கிடத்தி விட்டாள். விடியற் காலையில் பிள்ளைக்குப் பால் கொடுக்க நான் எழுந்தபோது, ஐயோ! அது செத்துக் கிடந்தது. சற்று விடிந்தபின் பிள்ளையை உற்றுப் பார்த்தபோது, அது நான் பெற்ற பிள்ளை அல்ல என்று கண்டேன்" - என்றாள்.

இதைக் கேட்ட மற்றவளோ, "இல்லை! உயிரோடிருப்பதே என் பிள்ளை, செத்துப் போனது உன் பிள்ளை" என்றாள். முதல் பெண்ணோ, "இல்லை! செத்த பிள்ளைதான் உன்னுடையது. உயிரோடிருக்கும் பிள்ளை என்னுடையது" என்றாள். இவ்வாறு அரசன் முன் அவர்கள் வாதாடினர்" - 1அரசர்கள் 3:16-22.

நீதி வழங்க வேண்டிய சாலமோன் அரசன், தீய நோக்கத்துடன் அடுத்தவளின் குழந்தையை அபகரித்துக் கொள்ள முயற்சிக்கும் நாடகத்தைப் புரிந்து கொண்டார். அதற்கேற்பத் தீர்ப்பு வழங்குகின்றார். - 1அரசர்கள் 23:28.

பொறுப்பிலிருக்கும் ஒருவர் - குடும்பத் தலைவரோ - சமூகத் தலைவரோ, பிரச்சனைகளுக்குத் தீர்வு காண நேரிடும் போது, கூர்ந்து நோக்கி நல்ல முடிவெடுக்க வேண்டும்; சரியான முடிவாயிருக்க வேண்டும். இது எப்போது சாத்தியமாகும்?.... கூர்ந்து கேட்கும் இதயம் - கடவுளுக்குச் செவி மடுக்கும் இதயம் - தன்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் இதயங்களைப் புரிந்து கொண்டால் மட்டுமே வசப்படும். இறைவனின் நிறை மொழியைச் செப வேளையில் உன்னிப்பாகச் செவி மடுக்கும் போது.... தன்னுடைய மக்களின் எதிர்பார்ப்பை உணரும்போது.

செவி மடுக்கும் பண்பில்லாத தலைவனின் குடும்பமோ, சமூகமோ, நிம்மதியாக - நேர்மையாக வாழ இயலாது. அன்புடனும், செவி மடுத்தும் உறவில் மகிழ்வுடன் வாழ்வதற்கே நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம்.

அன்பு, சொல்வதைக் கேட்டுப் புரிந்து கொள்ளும். அத்தகைய இதயத்தைத் தாரும் இறைவா!

## 3. இல்லச் சமூகம்

சமூகம் என்பது, இல்லம் நிறைந்திருப்பது. இல்லத்தில்தான் நான் அறியப்படுகிறேன் - நேசிக்கப்படுகிறேன் - கேட்கவும் - போற்றப் படுவதற்குமான புகலிடம். எனவே, அங்கே நான் சுதந்திரமாக இயங்க முடியும்.

இல்லமும் சமூகமும் துவங்குவது இருவரால், ஒரு கிறிஸ்தவச் சமூகம் என்றால், அங்கே இயேசுவும் இருக்கிறார். "இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" - மத்தேயு 18:20.

இறைவனோடு இருவர் - கணவன் மனைவி - இதுதான் அடித்தளக் கிறித்தவச் சமூகம்!

இவர்களோடு அன்புடன் வரவேற்கப்படும் குழந்தைகளும் இணைந்து இல்லச் சமூகத்தை நிறைவு செய்கின்றனர். இல்லம் என்றால், கடவுளின் மக்கட் செல்வங்களை மகிழ்வுடன் வரவேற்று அன்பு பாராட்டும் பண்பு நிலவ வேண்டும்.

இல்லத்தில், ஒரு தம்பதியும் குழந்தைகளும் மட்டும் இருந்தால் போதும் என்பது சரியல்ல. ஒரு குடும்பம் மற்றக் குடும்பத்துடன் இணைந்து, குடும்பங்களின் சமூகமாகத் துலங்குவதே நிறைவாகும். என்னுடைய முழு வளர்ச்சி என்பது என் இல்லத்தோடு மட்டும் நின்று விடாமல், அருகில் வாழும் பிற மக்களோடும் இணைந்து ஒரு சமூகமாக வாழ்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறேன்.

நான் ஒரு மகளாகவோ, மகனாகவோ, சகோதரியாகவோ, சகோதரனாகவோ, துணைவியாகவோ, துணைவனாகவோ இருந்தாலும், என் இல்லத்தை விட்டுப் புறம்பேயும் உறவுகள் இருக்க வேண்டும். நான் ஒரு தனி மனிதனாக அல்ல, என் குடும்பம் முழுவதுமே, பெரிய சமூகத்துடன் உறவில் மகிழ முன்வரவேண்டும்.

எடுத்துக்காட்டாக - ஒரு குடும்பத்தின் தாய், சிறு குழந்தையாக இருந்தபோது, முதன் முதலில் தன்னுடைய பெற்றோருக்கும், பிறகு தன்னுடைய உடன்பிறப்புகளுக்கும், விளையாட்டுத் தோழர் தோழிகளுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், சக மாணவ மாணவிகளுக்கும், சமூகத்தில் வாழும் பெரிய மனிதர்களுக்கும் அறிமுகமான பிறகுதான் வருங்காலத் துணைவனுக்கு அறிமுகமாகிறாள். ......இவையெல்லாம் ஒரு பண்பட்ட சமூகத்தில்தான் சாத்தியமாகும்.

ஒரு குடும்பத்தின் தாயாக அவளுடைய குழந்தைகள்மீது பரிவும் அக்கறையும் கொள்கிறாள் - தன்னுடைய ஆளுமை வளர்ச்சியைப் பேணுகிறாள். மனித இதயம் சிலரிடம் மட்டும் அக்கறை கொள்ளத் தூண்டுகிறது. அவளுடைய மக்கள் வளர வளர அந்தத் தாயினுடைய கவனம் பிறர்மீதும் அக்கறை கொள்ளத் தூண்டுகிறது. ...சமூகத்துடன் இணைய முற்படுகிறாள். நாளடைவில் தன்னையே வளர்த்துக் கொள்கிறாள். “அவளுடைய செயல்களின் நற்பயனை எண்ணி அவளை வாழ்த்துங்கள்; அவளது உழைப்பை மக்கள் மன்றம் பாராட்டுவதாக” - நீதிமொழிகள் 31:31.

பெரிய சமூகத்தின் உதவிகளின் மூலமாகவே, குடும்பம் என்ற சிறு குழுவில் உள்ள குழந்தைகள், தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற முடியும். பலதரப்பட்ட மக்களோடு பழகவும், உறவில் மகிழவும், தங்களின் ஆளுமையை வளர்த்துக் கொள்ளவும் சமூகங்களின் உறவு தேவைப்படுகிறது. இத்தகைய உறவும் பழக்க வழக்கங்களும் திருமணத்திற்குத் தேவைப் படுகிறது. இதுபோன்ற வாழ்க்கை முறையில் ஈடுபாடின்றி, ‘நாம் இருவர்‘ என்ற மிதப்பில் திருமண வாழ்வில் ஈடுபடுவது, தனித் தீவில் வாழ்வதற்கு ஒப்பாகும். தனி மரம் தோப்பாகாது. சமூக வாழ்க்கை முறையை அனுபவிக்காதவர்கள், வாழ்க்கையின் பெரும் பகுதியை இழந்துவிட்டனர் என்பதே உண்மை!

திருமுழுக்கினால் நாமனைவரும் உலகளாவிய கத்தோலிக்கத் திருஅவையின் உறுப்பினராகிறோம். அத்துடன், அனைத்துலகக் கிறித்தவர்களின் சமூகத்திலும் பங்கு பெறுகிறோம். இதுதான் மீட்பு. மீட்பென்பது சமூகம். மனிதன் என்பவன் கடவுளோடும் பிறரோடும் இணைந்து வாழும்போதுதான் முழு மனிதனாகிறான்.

எனவே, பரந்துபட்டுக் கிடக்கும் சமூகத்தோடு ஒட்டி உறவாடாதவரை, இல்லம் நிறைவு பெறாது.

‘COMMUNITY IN THE LORD’

உதவியுடன்



**கலாபன் வாஸ்**

# கண்காட்சி

மனிதர்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு பிடிக்காத ஒரு சொல் மாற்றம். இப்படியே இருந்துவிட்டு போவதில்தான் சுகம் என்ற மாயை நம்மை அலைபேசி போல அடிமையாக்கி வைத்திருக்கிறது.

இன்று பல வீடுகளில் இளைஞர்களுக்கு அர்ச்சனை நடப்பதே இதை வைத்துத்தான். இவன் (ள்) வாழ்க்கையின் நிதர்சனங்களை எப்படி புரிந்து கொள்ள போகிறா(ன்)ள்? வாழ்வின் ஏற்ற இறக்கங்களை எப்படி சந்திக்க போகிறான்(ள்)? என்று பல பெற்றோர் மனதில் விடையில்லா கேள்விகள் பல உண்டு.

பல நேரங்களில் மாணவ மாணவிகளுக்கு தன்னம்பிக்கை வகுப்புகள் எடுக்கும்போது சில கருத்துக்கள் அவர்களை வெகுவாக கவரும் போது இதை எங்கு கற்றீர்கள்? என கேட்பார்கள். பல நூல்களை படித்தாலும், நம்பிக்கை ஏற்றிய சொற்கள், ஆளுமை வளர்க்கும் உத்திகள் அதிகமாக நான் கற்றுகொண்டது திருவிவிலியத்தில் இருந்துதான் என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா? இதைப் படித்து கொண்டிருக்கும் உங்களைப் போலவே இந்த பதிலை நான் சொன்னதும் பலர் ஆச்சரியமாகப் பார்ப்பார்கள் .

திருவிவிலியம் ஆன்மீகத்தின் அடிநாதமாக இருப்பது போல ஆளுமை வளர்க்கும் ஆழமான கருத்துக்களை கொண்டுள்ளது என்றால் மிகையல்ல. நம்முடைய இலக்குகளை அடைவதில் நமக்கு உற்ற துணையாக இறைவன் தந்த ஒப்பற்ற வழிகாட்டி திருவிவிலியம். அதில் ஒன்றுதான் இன்றைய நமது தேடல் .

ஒரு சின்ன பயிற்சி. உங்கள் கண்களை கொஞ்சம் மூடுங்கள். நீங்கள் விரும்பிய வாழ்க்கையை கண்முன் கொண்டு வாருங்கள் எடுத்துக்காட்டாக உங்கள் தந்தை ஒரு கடலோடி. நீங்கள் மிகுந்த ஆர்வத்தோடு படித்து மாவட்ட ஆட்சியராகி பணி பொறுப்பேற்பதாக வைத்து கொள்வோம். இப்போது உங்கள் தினசரி வாழ்க்கை எப்படி இருக்கும்? காலை எழுந்ததும் பெரிய பங்களா. உங்களுக்கு காபி கொடுக்க பணியாளர் தயாராக உள்ளார். கடந்த காலத்தில் புயல் மழை குளிர் பாராமல் உழைத்து களைத்த உங்கள் பெற்றோர் இன்று பஞ்சு மெத்தையில் உறக்கம் கலைக்கிறார்கள். காலார அவர்களோடு காலை நடைபயிற்சி. அலுவலகம் போனால் பெரிய பொறுப்புகள். அதை திறம்பட செய்ததற்காக குடியரசு தலைவரிடம் இருந்து விருது கிடைக்கிறது. உங்களோடு சேர்ந்து நீங்கள் பிறந்த ஊரும் நாடும் உங்களை உச்சி முகர்கிறது. நீங்கள் அந்த விருதோடு நிற்கும் படம் நாளேடுகளில் முன் பக்கத்தை அலங்கரிக்கிறது. இப்போது மெதுவாக கண்களை திறக்கலாம். எப்படி இருந்தது உங்களுக்கு? ஒரு புத்துணர்வை உணர முடிகிறதா? இதற்கு பெயர் காட்சிபடுத்துதல் .

நாம் நமது மனதை பயன்படுத்தி, நமக்குத் தேவையானதை உருவகப்படுத்தும்போது, அதை காட்சிப்படுத்தல் என்று அழைக்கிறோம். காட்சிப்படுத்தல் என்பது நமது வாழ்க்கையில் அந்த விருப்பத்தை வெளிப்படுத்தும் வகையில் நமது மனதில் உருவாக்கும் செயல்முறை மற்றும் சக்திவாய்ந்த நடைமுறையாகும். உறுதிமொழிகளுடன், காட்சிப்படுத்தல்



என்பது ஒரு சக்திவாய்ந்த ஆக்கப்பூர்வமான கருவியாகும்.

பல விளையாட்டு வீரர்கள், மற்ற பயிற்சிகளை காட்டிலும் இந்தக் கலையை பயன்படுத்தி தாங்கள் எட்டிய உயரத்தை, தாங்கள் படைத்த சாதனைகளைப் பற்றி பேசி இருப்பதைப் படித்திருப்பீர்கள். அவர்கள், அந்த ஓட்டப்பந்தயத்தையோ, விளையாட்டுப் போட்டியையோ தங்கள் மனதில் உண்மை என காட்சிப்படுத்தி, அது நடைபெறும்பொழுது ஏற்படும் மகிழ்ச்சி, ஆனந்தம், பேருவகை போன்றவற்றை இந்த நொடியிலேயே உணரும்பொழுது, அவர்கள் அந்த போட்டிக்கு தங்களை முழு வீச்சில் தயார் செய்து கொள்கிறார்கள்.

1984இல், மருத்துவர் டென்னிஸ் வாட்லி என்பவர் இந்த யுக்தியை ஒலிம்பிக் வீரர்களிடம் பயன்படுத்தினார். 1986இல் அவர் எழுதிய வெற்றி மனப்பாங்கு என்ற பிரபலமான புத்தகத்தில், மனக்காட்சிப் படைப்புத் திறனை கொண்டு எப்படி வெற்றிகரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்று விரிவாக எழுதியுள்ளார். இந்தக் கலையைக் கொண்டு அவர் பயிற்றுவித்த வீரர்களின் ஒலிம்பிக் செயல்திறன் வியக்கவைக்கும் அளவில் இருந்தன.

நீங்கள் எண்ணுவது எதுவாக இருந்தாலும், உங்கள் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும், நீங்கள் விரும்பினாலும், அதை முழுவதுமாக, தெளிவாக உணர்ந்து காட்சிப்படுத்துதல் அவசியம். இதற்கு தினம்தோறும் நேரம் ஒதுக்க வேண்டும். இது எப்படி நடக்கும் என்பதைப் பற்றிய கவலை

தேவை இல்லை. ஆனால், முழு நம்பிக்கையோடு நம் மனக்கண்ணில் இதை காட்சிப்படுத்தும் பொழுது, அதில் நிலைகொள்ளும்பொழுது, நம் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான விதையை நாம் வலிமையாக விதைக்கிறோம்.

அது சரி ! திருவிவிலியத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

மனிதர்கள் மட்டுமல்ல எல்லா உயிர்களுக்கும் இந்த விதி பொருந்தும் என்பதற்கு விவிலியம் சான்று பகர்கிறது. தொடக்க நூல் 30வது அதிகாரத்தில் யாக்கோபு தனது மாமா லாபானிடம் தனக்கான உரிமை ஊதியத்தை கேட்கும் போது "உம் மந்தைகளூடே இன்று நான் செல்வேன். அவற்றினின்று கலப்பு நிறமோ புள்ளியோ உடைய செம்மறியாடுகளையும் கறுப்பு நிறம் கொண்ட ஆட்டுக் குட்டிகள் அனைத்தையும் புள்ளியோ கலப்பு நிறமோ உடைய வெள்ளாடுகளையும் தனியாகப் பிரித்துக் கொள்வேன். இவை எனக்குரிய கூலியாக இருக்கட்டும்." என்று சொல்ல அதற்கு சரி என்ற லாபான் பின்பு தந்திரமாக அவரை ஏமாற்ற நினைத்து வரியோ புள்ளியோ உடைய வெள்ளாட்டுக் கிடாய்களையும், கலப்பு நிறமோ புள்ளியோ உடைய வெள்ளாடுகள் அனைத்தையும் வெள்ளைப் புள்ளி கொண்ட எல்லாவற்றையும், கறுப்பாய் இருந்த எல்லா ஆட்டுக்குட்டிகளையும் பிரித்துத் தம் புதல்வரிடம் ஒப்படைத்து தனக்கும் மீதமுள்ள தன் மந்தைகளை மேய்த்து வந்த யாக்கோபுக்கும் இடையில் மூன்று நாள் வழித்தூரம் இருக்கும்படியும் செய்துவிட்டான்.

"இதைக் கண்ட யாக்கோபு கலங்கவில்லை. புன்னை, வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் பசிய கொப்புகளை வெட்டி, அவற்றில் இடையிடையே உள்தண்டின் வெள்ளைப்பகுதி தெரியுமாறு உரித்தார் .மேலும், தம் மந்தைகள் தண்ணீர் குடிக்க வரும்போது, ஆடுகள் அந்த வரியுள்ள கொப்புகளை எதிரில் கண்டு பொலிந்து சினைப்படும் பொருட்டு, நீர்த்தொட்டிகளில் அவற்றை அவர் போட்டு வைத்தார். பொலியும் நேரத்தில் அக்கொப்புகளைக் கண்டு பொலிந்த ஆடுகள் வரியோ, கலப்பு நிறமோ, புள்ளியோ உடைய குட்டிகளை ஈன்றன." என்கிறது விவிலியம்.

ஆடுகள் தண்ணீர் குடிக்கும் போது நீருக்குள் கிடந்த மரக்கிளைகள் அதன் உடலில் புள்ளிகள் இருப்பதைப் போலவும் , வரிகளைப் போலவும் கலப்பு நிறத்தை போலவும் தெரிந்ததே அதற்கு காரணம் என நவீன அறிவியல் அதற்கான விடை சொல்கிறது. காட்சிப்படுத்துதலால் என்னவெல்லாம் நடக்கும் என்பதற்கு இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்?

இப்போது புரிகிறதா? நமது மக்கள் குடியரசு தலைவர் மறைந்த ஏவுகணை நாயகர் ஆ.பெ.ஜே. அப்துல் கலாம் அவர்கள் சும்மா சொல்லவில்லை "கனவு காணுங்கள்" என்று....

கற்றுக் கொள்ள நீங்கள் விரும்பினால் உலகின் எந்த புத்தகத்தையும் விட திருவிவிலியம் தலைசிறந்த களஞ்சியம். காரணம் இறைவார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது.. உங்கள் கைகள் திருவிவிலியத்தை கையில் ஏந்தட்டும். மரியன்னை வழியே புது வாழ்வு மலரட்டும்.



முனைவர் சி. ஜாக்சன்



# பனிமய சாட்சியங்கள்

**பனிமய சாட்சியம் : 103**

## சகாய ஆரோன் – விண்ணிலா
**கோடிமுனை (கன்னியாகுமரி மாவட்டம்)**

கடந்த ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி முதற்சனி அன்று பனிமய மாதாவிடம் எங்கள் சங்குத் தொழில் முன்னேற்றம் அடைவதற்கும், கடன் பிரச்சனை தீர வேண்டியும் திருப்பலியில் ஒப்புக்கொடுத்தோம். பனிமயத்தாய் எங்களின் வேண்டுதலைக் கேட்டு பரிந்துரைத்ததால் 15ஆம் தேதி அன்று எங்கள் படகில் வலம்புரி சங்கு கிடைத்தது. சங்கை விற்றதன் மூலமாக எங்களது கடன் பிரச்சனை முழுவதையும் தாய் தீர்த்துவைத்து விட்டார்கள். கேட்ட வரம் தரும் பனிமயத்தாயே உமக்கு கோடான கோடி நன்றி!

**பனிமய சாட்சியம் : 104**

## கவி ஜேஸ்பர் – சகாய ஜோஸ்டினா
**அழகப்பபுரம்**

என்னுடைய மூத்த மகள் மேரி ஆக்னஸ் மோனாவுக்கு தொண்டை சதை அறுவை சிகிச்சை நல்லபடியாக நடந்து முடிய மாதாவிடம் வேண்டினோம். அறுவை சிகிச்சை நல்ல படியாக நிறைவேற்றித் தந்ததற்காக நன்றி! அவள் இப்போது நன்றாக இருக்கிறாள். இயேசுவுக்கே நன்றி! பனிமய அன்னையே வாழ்க!

**பனிமய சாட்சியம் : 105**

## நொரீன் மச்சாது

நான் புனித சார்லஸ் கோவில் பங்கைச் சேர்ந்தவள். என் மகள் ரேக்கா ரவேல் திருமணமாகி 10 ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்தாள். நாங்கள் தவறாது மாதாவிடம் மன்றாடி வந்தோம். சனிக்கிழமைகளில் விசேஷமான ஜெபங்கள் செய்து, பனிமயத் தாயின் ஆலயத்திற்குச் சென்று பனிமயத் தாயிடம் வேண்டி நின்றோம். நம் பனிமயத் தாய் எங்கள் ஜெபங்களையும், கண்ணீரையும், கண்டு மனம் இரங்கி, தன் மகனிடம் மன்றாடி என் மகளுக்கு 2024 மார்ச் மாதம் 6 ஆம் தேதி ஒரு அழகான பெண் குழந்தையைக் கொடுத்தார்கள். அதற்காக நானும் என் வீட்டாரும் பனிமயத் தாய்க்கு கோடான கோடி நன்றி செலுத்தி மாதாவை மகிமைப் படுத்துகின்றோம். இயேசுவுக்கே நன்றி! பனிமய அன்னையே வாழ்க!

# அன்னை ஓர் ஆலயம்




"அன்னை ஓர் ஆலயம்" என்பார்கள். ஆனால் அந்த ஆலயமே அன்னையாக, கதிரவனை ஆடையாய் அணிந்து, பன்னிரு விண்மீன்களை பொன்முடியில் தரித்து, வெண்ணிலவில் பொற்பாதம் தடம் பதித்து, பொன் நகையோடு புன்னகையுடன், செங்கமல கரத்தில் செந்நிற மாதுளைப் பழமேந்தி, திவ்யபாலன் இயேசுவை தன் பொற்கரத்தில் பொதிந்து, சொர்ணமயமாய் வீற்றிருக்கும் ஏழு கடற்துறையின், ஏக அடைக்கலத் தாயாகிய நமது பனிமய அன்னை சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவை காண கண்கோடி வேண்டும்.

நம் முத்து நகருக்கு வசந்தம் 1555ஆம் ஆண்டு ஜுன் மாதம் 9ஆம் நாளன்று சந்தலேனா (Sancta Helena) என்ற கப்பல் மூலம் வந்தது. ஆம், அன்றுதான் நமது பனிமய அன்னையின் அற்புத, அழகிய திருச்சுரூபம் தூத்துக்குடி வந்தடைந்தது. இதன் பின்னர்தான், வங்கக் கடல் வளம் பெற்றது. முத்துச் செல்வம் கொழித்தது. மக்களின் விசுவாசம் தளைத்தது. திருமறையும் வேகமாக வளர்ந்தது.

முத்துக்குளித்துறை மக்கள் ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதம் 5ஆம் நாளன்று, "சம்பவுல் ஆலயத் திருவிழா"வை, "பனிமய அன்னையின் திருநாளென" மத நல்லிணக்க விழாவாக, சாதிமத பேதமின்றி ஆடம்பரமாகக் கொண்டாடத் தொடங்கினர். அன்னையின் திருநாளை பனிமய மாதாவின் திருநாளாகவும், இயேசு சபையினரின் தலைமை இல்லத் திருநாளாகவும் பனிமய அன்னையின் ஆலய ஆண்டு விழா எனவும் முப்பெரும் விழாவாக மக்கள் மகிழ்ச்சியுடனும், ஆர்வத்துடனும் கொண்டாடத் தொடங்கினர்.

பனிமய மாதாவின் அழகுறு சுரூபம் முத்து நகர் வந்தடைந்த 250ஆம் ஆண்டைக் கொண்டாடும் விதமாக, கிழக்கிந்தியப் போரில் உயிர் பிழைத்ததற்காகவும், முத்துக்குளிப்பின் அபரிமிதமான செழிப்பிற்காகவும், தொன்

கபிரியேல் தெக்குரூஸ் அவர்கள் பனிமய மாதாவுக்கு நன்றி செலுத்தும் விதமாக, தம் சொந்த செலவில் பனிமய அன்னைக்கு தேர் ஒன்றினைச் செய்தார்.

1805ஆம் ஆண்டு உலா வரவேண்டிய தங்கத் தேரானது 02.02.1806இல் திருமந்திர நகர் வீதிகளில் முதன்முதல் தங்கத் தேராக உலா வந்தது. பனிமய அன்னைக்கு, தம் சொந்த செலவில் தேர் செய்து தந்தவரை இன்றுவரை “தேர்மாறன்” என்று அன்புடன் அழைப்பது சாலப் பொருத்தமே.

கடந்த 2023ஆம் ஆண்டு, வரையிலும் தூத்துக்குடி மாநகர வீதிகளில் தங்கத் தேரில் கம்பீரமாக அழகுற நம் மரியன்னை கடல் அலையென பக்திக் கடலில் மக்கள் திரளில் நீந்தி வருவது நம் பனிமய மாதா திருவிழாவின் முத்தாய்ப்பாகும்.

அந்தக் காலத்தில், கடலாடிகள் இரவில் கடற்பயணம் செல்லும்போதும், மீன்பாடு முடிந்து திரும்பி வரும்போதும், திக்குத் தெரியாத இருண்ட கடலில் விடியற்காலை நட்சத்திரத்தைக் கண்டவுடன், சோர்வு நீங்கி, புத்துணர்ச்சியோடு தண்டு வலித்து, சுலபமாக கரை திரும்புவர். இன்றும், நாம் துன்பக் கடலில் நீந்தும்போதும் நமது மரியன்னையை நினைத்தாலே போதும். நாம் சோர்வு நீங்கி புத்துணர்ச்சியோடு இந்தத் துன்பக் கடலில் இருந்து எளிதாக கரையேற முடியும். எனவேதான், நாம் பனிமய அன்னையை “விடியற் காலத்து நட்சத்திரமே” என்று அன்புருக அழைக்கின்றோம்.

இஸ்ரயேல் மக்களுக்கு உடன்படிக்கைப் பேழை என்பது இறைவனின் உறைவிடம் ஆகும். வானதூதர் மரியாவிடம், “தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்” என்றதும், மரியா, “நான் ஆண்டவரின் அடிமை” என்று தன்னையே அர்ப்பணித்தார் (லூக்கா 1:35). இதையே நாம் பழைய ஏற்பாட்டில், உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டிருந்த இடத்தை மேகம் நிழலிட்டதாகக் காண்கிறோம் (விப 40:35). இந்தப் பின்னணியில்தான், நாம் ஜெபமாலையின்போது, சொல்லும் புகழ் மாலையில், மரியன்னையை “உடன்படிக்கைப் பெட்டகமே” என்று அன்புருக அழைக்கின்றோம்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க புதுமையான, அற்புதமான, பாரம்பரியம் மிக்க இந்த பனிமய அன்னைத் திருவிழாவை நாம் எவ்வாறு கொண்டாடுகிறோம்? உள்ளார்ந்த உண்மையான பக்தியோடு கொண்டாடுகிறோமா? “நீங்களே கடவுளை ஆலயமென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? (1கொரி 3:16) என்று நம்மைப் பார்த்து தூய பவுலடியார் கேள்வி எழுப்புகின்றார்.

அன்னை மரியா, தமது வாழ்வில் நடந்த அனைத்து இறைநிகழ்ச்சிகளையும் தனது உள்ளத்தில் பதித்து, தியானித்து வந்ததைக் காண்கிறோம் (லூக் 2:51). அன்னையின் வாழ்வில் நாம் தடம் பதிக்க வேண்டுமென்றால், இறைவார்த்தையை உள்ளத்தில் பதித்து தியானிப்போம். “இறைவார்த்தையை கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். ஏனென்றால், இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியில் தம் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்றுவிடும் ஒரு மனிதருக்கு ஒப்பாவர் (யாக் 1:22-24).



**முனைவர் ஞா. லாரன்ஸ்**

# ஜில்லென்று விழுந்த பனித்துளி



அலைபேசி ஒலிக்கவே எடுத்துப் பேசினார். எதிர்முனையில் அவர் மனைவியின் தோழி.

"பிரதர் நலமா?"

"ஆங். நலம் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உடல் அலுப்பு எல்லாம் போய்விட்டதா?"

"உங்களுக்கு யார் சொன்னது பிரதர்?"

"உங்கள் கணவர்தான். காலைத் திருப்பலி யில் தங்களைக் காணாததால் அவரிடம் விசாரித்தேன். தாங்கள் களைப்புடன் இருப்பதால் திருப்பலிக்கு வரவில்லை என்று சொன்னார்"

"அது சரி. அதெல்லாம் இருக்கட்டும். மற்ற ஆலயங்களில் ஏதாவது திருமணம், புதுநன்மை போன்ற விஷேச திருப்பலி நடைபெறுகிறதா? கொஞ்சம் விசாரித்துச் சொல்லுங்கள் பிரதர்."

"சரி சொல்றேன். அப்புறம் ஒருநாள் திருப்பலிக்கு வராவிட்டால் என்ன? மறுநாள் தான் திருப்பலிக்கு வரப்போகிறீர்களே!"

"அட நீங்கள் வேற. தினசரி காலையில் திருப்பலிக்குச் செல்லவில்லை என்றால் அன்றைய நாள் முழுதும் எதையோ இழந்ததைப் போல் இருக்கும்."

"ஓகோ."

"என்ன ஓகோ? உங்கள் மனைவி காலையில் வழக்கம்போல் திருப்பலி பார்த்துவிட்டு திருமணம், புதுநன்மை (அழைப்பின் பேரில்) போன்றவற்றிலும் பங்கு கொள்கின்றாரே?"

"ஆமாம். எல்லா திருப்பலிக்கும் அரை மணி நேரம் முன்பாக வேறு சென்று விடுவார். அவளிடமும் இதே கேள்வியைத் தான் கேட்டேன்."

"அதற்கு அவர் என்ன சொன்னார்?"

"நீங்கள் சொன்ன பதிலைத்தான் சொன்னார்!"

"உங்கள் மனைவி அப்படி திருப்பலி, திருப்பலி என்று செல்வதால் தான் நீங்கள் உங்கள் பிள்ளைகள் எல்லாரும் நலமாக பிரச்சனையின்றி வாழ்கிறீர்கள்."

"அங்கே மட்டும் என்ன வாழுதாம்?"

"நான் ஒருநாள் ஒரு திருப்பலி மட்டும்தான் செல்வேன். அன்றைய தினம் அழைப்பிதழ் வந்திருந்தால் காலைத் திருப்பலியைத் தவிர்த்துவிட்டு விஷேசத் திருப்பலியில் மட்டும் கலந்து கொள்வேன். அதனால்தான் எங்கள் வாழ்க்கையில் அங்கங்கே துயரம் வந்து செல்கிறது. ஆனால் உங்கள் மனைவி காலை, விஷேசத் திருப்பலி, மாலை ஆராதனை ஒன்றையும் விடுவதில்லையே!"

இருவரும் வேறு வேறு நேரத்தில் ஆலய அலுவலகப் பணியாளரிடம் விசாரித்தனர். அவர் ஏதோ ஞாபகமாக 10.30 மணி திருப்பலி இருக்கிறது என்றார்.

இருவரும் தாங்கள் கேட்டதை பிறரோடு பகிர்ந்து கொண்டனர்.

பெண்மணி ஆசை ஆசையாக ஆலயம் சென்றார். விஷேச திருப்பலி எதுவும் நடப்பது போன்ற அறிகுறி தென்படவில்லை. ஆலயப் பராமரிப்பாளரை வினவினார். அவர் அப்படி எதுவும் இல்லை. வேண்டுமானால் அட்டவணையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள் என்றார்.

ஏமாற்றமே மிஞ்சியதால், நற்கருணை நாதரை சந்தித்து விட்டு வீடு வந்து சேர்ந்தார்.

அன்று மாலை அந்தச் சகோதரி அலைபேசியில் தொடர்பு கொண்டார். “பிரதர் உங்களிடமும் என்னிடமும் அலுவலகப் பணியாளர் தவறான தகவலைத் தந்துள்ளார்.”

“அப்புறம் என்ன செய்தீர்கள்.”

“மாலைத் திருப்பலிக்குச் சென்று வந்தேன். இப்போதுதான் மனது நிம்மதியாக இருக்கிறது பிரதர்.”

“ரொம்ப சந்தோஷம்.”

அன்றைய தினம் இரவு மனைவியுடன் குடும்ப செபமாலை சொல்லிவிட்டுப் உணவருந்தியவருக்கு, அந்தச் சகோதரி சொன்னது அசைவாடியது. அன்றாடம் வரக்கூடிய சிறு சிறு பிரச்சனைகள் பனி போல விலகிச் செல்வதை நினைத்துப் பார்த்தார்.

கணவர் அலுவல் காரணமாக தினசரி திருப்பலி செல்லாவிட்டாலும், தினசரி திருப்பலியிலும் ஆராதனையிலும் பங்கேற்கின்ற மனைவியின் செப உணர்வினால்தான் குடும்பம் தழைத்தோங்கி வருவதை உணர்ந்தார். நாள் பூசைக்கே செல்லாதவர்களும் நன்றாகத்தான் இருக்கிறார்கள் என்றாலும், அது அவர்களுக்கு நிரந்தரமில்லை. எல்லா நேரமும் பிரச்சனைகளை அவர்களால் சமாளிக்க முடியாமல் போகலாம்.

நாமும் பணி ஓய்வுக்குப் பின்னர் தினசரி திருப்பலிக்குச் செல்ல வேண்டும் என்ற தீர்மானத்துடன் படுக்கச் சென்றார்.



**ம. வெனான்சியுஸ்**

## வழியனுப்புகிறோம்!

நமது பங்கிலுள்ள அடைக்கல அன்னை சபையைச் சேர்ந்த **சகோ. ஆரோக்கிய செல்வி, சகோ. பிலோமினா, சகோ. கிறிஸ்டி பிரியா சித்ரா, சகோ. கிறிஸ்டி ராணி, சகோ. இன்பென்டா சுகந்தி பிரியா** ஐவரும் பணி மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள். நமது பங்கின் அமலவையைச் சேர்ந்த **சகோ. குழந்தை தெரஸ்** அவர்களும் பணி மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள். இவர்கள் அனைவரின் பணிவாழ்வு சிறக்க வாழ்த்துகிறோம். பனிமயத் தாயின் ஆசீர் இவர்களோடு இருப்பதாக!

## வரவேற்கிறோம்!

நமது பங்கிலுள்ள அடைக்கல அன்னை சகோதரிகள் இல்லத்திற்கு **அருள்சகோதரி கரோலின், சகோ. அமலோற்பவம், சகோ. ஜெயந்தி, சகோ. மரிய கார்மெல், நால்வரும்** பணியாற்ற வந்துள்ளார்கள். நமது பங்கின் அமலவை இல்லத்திற்கு அருள்சகோ. **பென்ஸி** பணியாற்ற வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

# கார்மல் மலை புனித கன்னி மரியா



புனித கார்மல் அன்னை அல்லது கார்மல் மலை அன்னை அல்லது உத்தரிய மாதா என்பது கார்மல் சபையின் பாதுகாவலரான இயேசுவின் தாய் புனித கன்னி மரியாவுக்கு அளிக்கப்படும் பெயர்கள்.

கார்மல் மலை மிக ஆற்றல் உடையது. பாலஸ்தீன நாட்டில் ஹபோ வளைகுடாவில் சுமார் 1800 அடி உயரத்தில் உள்ளது. எபிரேய மொழியில் கார்மல் மலை என்றால் தோட்டம் என்று பொருள். (எரே 46;18) இம்மலையில் எலியா தங்கியிருந்து இறைவனோடு உறவாடினார் (1அர 18).

ஆகாபு மன்னன் பாகாலின் நானூற்று ஐம்பது பொய் இறைவாக்கினரையும் கார்மல் மலையில் ஒன்று திரட்டி பலியிட அழைத்தான். அவர்கள் பலி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் எலியா பலியிட்டபோது உடனே ஆண்டவரின் நெருப்பு கீழே இறங்கி எரிபலியையும் விறகு கட்டைகளையும் கற்களையும் மண்ணையும் சுட்டெரித்து வாய்க்கால் தண்ணீரையும் வற்றச்செய்தது. (1அர 18;48) எலியா கார்மல் மலையில் கடுமையான பஞ்சத்தை நீக்க, மழையைப் பெய்வித்து, பஞ்சத்தைப் போக்கினார். இவ்வாறு எலியா பல அற்புதங்களை கார்மல் மலையில் செய்ததால் இம்மலை எலியாவின் மலை எனவும் பெயர் பெற்றது.

திருச்சபை வரலாற்றில் சிலுவைப்போர் நடைபெற்றபோது, 12 முதல் 13ஆம் நூற்றாண்டு வரை கார்மல் சபையின் துறவிகள் இஸ்ரயேலில் உள்ள கார்மல் மலையில் வனவாசிகளாக வாழ்ந்தனர். அங்கு ஒரு கோவில் கட்டி அக்கால வழக்கப்படி அந்த இடத்தின் பெயராலேயே கார்மல் அன்னை ஆலயம் என்று பெயரிட்டனர்.

புனித சைமன் ஸ்டாக் என்பவர் தனது நாற்பதாவது வயதில் இங்கிலாந்தில் உள்ள கார்மல் சபையில் இணைகிறார். இஸ்ரயேலில் இருக்கும் கார்மல் சபைக்கு அனுப்பப்பட்ட அவர் கலகக்காரர்கள் அந்த இடங்களை ஆக்கிரமிக்கும் வரை அங்கிருந்து தன் செப ,தவ, ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுப்பட்டார்

அதன்பின் தனது சபைச் சகோதரர்களுடன் இங்கிலாந்து திரும்பிய அவர் ஏகமனதாக கி,பி. .1245ஆம் ஆண்டு சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாதாவின் மீது மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தார் இதுவே கார்மல் சபைத் தழைத்தோங்கக் காரணமாக இருந்தது.

1251 ஆம் ஆண்டில் கார்மல் துறவு சபை இடையூறுகளுக்கு உள்ளானது. அச்சமயத்தில் சைமன் அன்னை மரியிடம் ஏதாவது ஒரு தனிப்பட்ட சலுகையை வழங்குமாறு உருக்கமாகச் செபித்து வந்தார்

இவரின் செபத்தைக் கேட்ட அன்னை மரியா 1251ஆம் ஆண்டில் ஜூலை 16ஆம் தேதி கேம்பிரிட்ஜில் ஒரு கறுத்த ஆரஞ்சு நிற உத்தரியத்தை ஒரு கையில் ஏந்தியவண்ணம் அவருக்கு காட்சி கொடுத்து சொன்னார்.

“என் அருமை மகனே, இந்த உத்தரியம் உங்கள் சபைக்குரியது. நான் உங்களுக்கு வழங்கும் சிறப்புச் சலுகையின் அடையாளம் இது. இதனை உனக்காகவும் கார்மல் மலைச் சிறார்க்காகவும் நான் பெற்றது. இதை அணிந்து கொண்டு இறப்பவர்கள் நித்திய நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் இது மீட்பின் சிறப்பு அடையாளம். ஆபத்தில் காக்கும் கேடயம். அமைதி, மற்றும் பாதுகாப்பிற்காக வழங்கப்படும் உறுதி” என்று கழுத்தில் அணியும் இந்த உத்தரியத்தை அன்னை மரியிடம் பெற்றவர், புனித சைமன் ஸ்டாக்.

இதனால் கார்மல் மாதா உத்தரிய மாதா என்று அழைக்கப்படுகிறார். அதிலிருந்து உத்தரியம் அணியும் பழக்கம் ஏற்பட்டது. முன்பு ஆயர் உறுதிப்பூசுதல், அருட்சாதனத்தை சிறுவர்களுக்கு நிறைவேற்றும் போது உத்தரியத்தை அணிவிப்பார்.

‘ஸ்டாக்’ என்றால் அடிமரம் என்று பொருள்படும். இவர் தமது 12 வயதிலேயே துறவியாக ஓக் மரத்தின் அடியில் உள்ள காலியான இடத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர் இளைஞனாக இருந்தபோது புனிதப் பயணம் சென்றார். அங்கு கார்மல் துறவிகளுடன் சேர்ந்தார்.

பின்னர் ஐரோப்பா திரும்பி பல கார்மல் சபை இல்லங்களை உருவாக்கினார் குறிப்பாக கேம்பிரிடஜ், ஆக்ஸ்போர்டு, பாரிஸ், பொலோஞ்ஞா போன்ற பல்கலை நகரங்களில் கார்மல் சபை இல்லங்களை ஏற்படுத்தினார். கார்மல் சபையை தியானயோக வாழ்வில் இருந்து தர்மம் எடுத்து வாழும் சபையாக மாற்றினார்.

நாமும் அன்னையின் மீது பற்று கொண்டு அவரது பரிந்துரையை வேண்டி மன்றாடுவோம். கார்மல் மாதாவின் திருவிழா ஜூலை 16 ஆம் தேதி கொண்டாடப் படுகிறது.



**ரோஸ் சேவியர்**

# அம்மா!



தங்கத் தேரிலே பவனி வருகின்ற தாய்மரி நீதானம்மா!
தஞ்சமென உமைத் தேடி வந்த எங்கள் அன்னையாய் திகழ்வாய்
பொங்கும் கடலோரம் மந்த்ர மாநகரில் ஒளிர்பவள் நீதானம்மா!
சொந்தம் உமையன்றி யாரும் எமக்கில்லை காத்திடுவாய் அம்மா!

சாதிமதம் தாண்டி தேடி வருவோர்க்கும் அன்னை நீதானம்மா!
வாடி வதங்கிடும் மைந்தர் மகிழ்ந்திட அன்பினைத் தருவாய் அம்மா!
கோடி பக்தர்கள் கூடி வந்தாலும் தாங்கும் தாய் நீதானம்மா!
ஓடிச் சென்றவரும் நாடியே திரும்பிட அடைக்கலம் தருவாய் அம்மா!

குற்றம் புரிவோர்க்கும் நோயில் நலிந்தோர்க்கும் நம்பிக்கை நீதானம்மா!
குழந்தை வரம்வேண்டி வரன்கள் தனைத் தேடி வருபவர்க்கருள்வாய் அம்மா!
கல்வி செல்வத்தை வேலைவாய்ப்பினை தரும் தாய் நீதானம்மா!
கடலில் செல்வோர்க்கும் கரையில் உழைப்போர்க்கும் காவல் புரிவாய் அம்மா!

அண்டி வருவோர்க்கு இல்லை என்று சொல்ல மறப்பவள் நீதானம்மா!
அகில உலகோர்க்கும் புதுமைகள் கிடைத்திட பரிந்துரை செய்வாய் அம்மா!
கருவில் மறுவின்றி பணிவுடன் பாலனை சுமந்தவள் நீதானம்மா!
அமைதி ஓங்கிட கர்வம் ஓய்ந்திட தாழ்ச்சியைத் தருவாய் அம்மா!

விண்மீன் முடி சூடி, பாதம் பிறை மூட அழகே நீதானம்மா!
விண்ணின் அரசியால் மண்ணின் விடியலாய் எமக்கின்பம் தருவாய் அம்மா!
செங்கரத்திலே மன்னர் யேசுவை ஏந்தும் தாய் நீதானம்மா!
எங்கள் காவலே பனிமயத் தாயே எம்முள்ளம் வருவாய் அம்மா!



ஜோ. ரெஜினா கிரகோரி

# விவிலியப் போட்டி 111

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**திருப்பாடல்கள் 101 - 105**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. தூய ............................ என் இல்லத்தின் வாழ்வேன்.
2. நேரிய வழியில் ............................ எனக்கு பணிவிடை புரியச் செய்வேன்.
3. ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் ............................ .
4. அவர் தம் மக்களை ............................ வெளிக் கொணர்ந்தார்,
5. என் ............................ ஆண்டவரை போற்றிடு.
6. ஆண்டவரே உம் வேலைப்பாடுகள் எத்தனை ............................ .
7. அவர் உனக்கு பேரன்பையும் ............................ மணிமுடியாகச் சூட்டுகின்றார்.
8. மனிதரின் வாழ்நாள் ............................ போன்றது.
9. ஆண்டவர் தமது அரியணையை ............................ நிலைநிறுத்தியுள்ளார்.

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.07.2024**

## உங்கள் கவனத்துக்கு

**பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், *குடும்ப அட்டை எண்* மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும்.**

**ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும்.**

**வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம்.**



**பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :**

**63796 41209** *அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.*

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 1)

**ஜூலை - 2024**

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்பணி. ஸ்டார்வின்** |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி. பாலன்** |
| களப் பணியாளர் | : | **சகோதரர் தினகரன்** |
| பங்கு அலுவலகம் | : | 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | **ஞாயிற்றுக் கிழமைகளில்** |
|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 திருப்பலி | மாலை 5.30 திருப்பலி |
| | மாலை 6.30 நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *திங்கள் முதல் வெள்ளிவரை மாலை 06.15–06.45*

*சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*
- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பிற பங்குகளைச் சார்ந்தவர்களுக்கு திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. (திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.)*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் : 28.07.2024*

திருவிழா நவநாளில் - ஆயர் தலைமையில்

*புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

01. பனிமய அன்னைப் பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக் கருக்குழுவின் பரிந்துரைப்படி முன்னாள் பங்குத்தந்தை, உதவிப் பங்குத்தந்தை, அருள்சகோதரர் மூவருக்கும் 12.05.2024 ஞாயிறு மாலைத் திருப்பலியின் நிறைவில் நன்றி பாராட்டும் நிகழ்வு நடைபெற்றது. அன்பிய வழிகாட்டிகள், பக்த சபையினர் பொன்னாடைகள் போர்த்தி, அன்பளிப்புகள் வழங்கினர்.

02. 15.05.2024 புதன் கிழமை முற்பகல் நமது பங்கின் களப் பணியாளர் **அருள்சகோ. ஆல்ட்ரின்** அவர்கள் பங்கிலிருந்து விடைபெற்றார்கள். அன்று மாலையே புதிய களப்பணியாளராக **அருள்சகோ. தினகரன்** நமது பங்கிற்கு வந்தார்கள். புதிய களப்பணியாளரை அன்புடன் வரவேற்றார்கள்.

03. 16.05.2024 வியாழக் கிழமை முற்பகல் நமது பங்கின் உதவிப் பங்குத்தந்தை **அருள்பணி. சைமன் ஆல்டஸ்** அவர்கள் இடிந்தகரை வரை சென்று அனுப்பிவைக்கப்பட்டார்கள். அன்று மாலையிலே இடிந்தகரையிலிருந்து வந்திருக்கும் அருள்பணி. பாலன் நமது பங்கின் புதிய உதவிப் பங்குத்தந்தையாக பொறுப்பேற்றார்கள்.

04. 19.05.2024 ஞாயிற்றுக் கிழமை மாலைத் திருப்பலி முடிந்ததும், **மே மாத வணக்கமும்**, தொடர்ந்து **நற்கருணை எழுந்தேற்றம்** செய்யப்பட்டு நன்றி வழிபாடும் நடத்தப்பட்டன.

05. நமது பேராலயப் பங்கின் பக்த சபையான **புனித பொம்பெயி மாதா சபையினர் தங்களின் 121ஆம் ஆண்டுத் திருவிழா**வை 12.05.2024 ஞாயிறு காலைத் திருப்பலியில் கொண்டாடினார்கள். திருமதி. நொரின் மச்சாது தலைமைப் பொறுப்பை நிறைவு செய்ய, திருமதி. சகாயம்மாள் புதிய தலைவியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். காலை உணவைப் பகிர்ந்து மகிழ்ந்த சபையினர், மாலையில் பங்குத்தந்தையின் தலைமையில் விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

06. முன்னாள் பங்குத்தந்தை ஐந்தாண்டு பணி அனுபவங்களைத் தொகுத்து எழுதியுள்ள **"மரபுகளும் மாற்றங்களும்"** என்னும் நூலை பனிமயத் தாயின் திருச்சன்னிதியில் வெளியிட்டார்கள். அவர்களுடன் இணைந்து உழைத்த, செபித்த, உதவி செய்த அனைவருக்கும் சிறப்பாக நன்றி கூறினார்கள்.

07. புதிய பங்குத்தந்தை **அருள்பணி. ஸ்டார்வின்** அவர்கள் 20.05.2024 திங்கள் கிழமை மாலை 05.15 மணிக்கு பேராலய வளாகத்தைச் சுற்றிப் பவனியாக அழைத்து வரப்பட்டு 05.30 மணித் திருப்பலிக்குத் தலைமையேற்று, திருப்பலியின் நிறைவில் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். பங்கு மக்களும், பக்த சபையினரும், மேய்ப்புப் பணிக்குழு உறுப்பினர்களும் திரண்டு வந்து பொன்னாடை போர்த்தி, அன்பளிப்புகள் கொடுத்து புதிய பங்குத்தந்தையை வரவேற்றார்கள்.

08. **பேராலயப் பங்கு மேய்ப்பு பணிப் பேரவையின் பொதுக்குழு கூட்ட**மானது 29.05.2024 புதன்கிழமை மாலை 07.15 மணிக்கு அந்தோணியார் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது.

09. 30.05.2024 வியாழக்கிழமை மாலை 06.30 மணிக்கு **தூய கன்னி மரியா எலிசபெத்தை சந்தித்த திருவிழா**வுக்கான மாலை ஆராதனை நடைபெற்றது.

10. 31.05.2024 வெள்ளிக்கிழமை வணக்க மாத நிறைவு நாளானதால் அன்று மாலை 06.30 மணிக்குப் பேராலயத்தைச் சுற்றி **செபமாலைப் பவனி**யும், தொடர்ந்து நற்கருணை ஆசீரும் நடைபெற்றது.

11. நமது பேராலயத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட செபமாலை 31.05.2024 வெள்ளிக்கிழமை மாலை 06.30 மணிக்கும், 01.06.2024 சனிக்கிழமை அதிகாலை 04.00 மணிக்கும் மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

12. 01.06.2024 மாதத்தின் முதற் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனி, நவநாள் வழிபாடு, நற்கருணை ஆசீர் நடைபெற்றது. இந்நிகழ்வுகள் நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், யாழ், சூர்யா தொலைக்காட்சியிலும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

13. இயேசுவின் தூய்மைமிகு திருவுடல், திருஇரத்தப் பெருவிழாவை முன்னிட்டு 02.06.2024 ஞாயிறு காலை 10.30 முதல் மாலை 04.00 வரை நமது பேராலயத்தில் **தொடர் நற்கருணை ஆராதனை** நடைபெற்றது. பங்கின் பக்த சபையினர் இதனை வழிநடத்தினார்கள்.

14. நமது பங்கின் அடைக்கல அன்னை அவை இல்லத்தில் பணியாற்றி பணிமாற்றம் பெற்று சென்றுள்ள சகோ. ஆரோக்கிய செல்வி, சகோ. பிலோமினா, சகோ. கிறிஸ்டி பிரியா சித்ரா, சகோ. கிறிஸ்டி ராணி, சகோ. இன்பென்டா சுகந்தி பிரியா ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் அமலவை இல்லத்திலிருந்து சகோ. குழந்தை தெரஸ் அவர்களும் பணிமாற்றம் பெற்று சென்றுள்ளார்கள். இவர்கள் அனைவரின் பணிவாழ்வு சிறக்க வாழ்த்துகிறோம்.

15. 13.06.2024 வியாழக்கிழமை **புனித அந்தோணியார் திருவிழா**வை முன்னிட்டு மாலை 05.30 மணிக்கு திருப்பலி புனித அந்தோணியார் சிற்றாலயத்தில் திருவிழா சிறப்புத் திருப்பலியாக நடைபெற்றது.

16. பேராலயப் பங்கு மேய்ப்பு பணிப் பேரவையின் கருக்குழு, நிதிக்குழு, செயற்குழுக் கூட்டங்கள் 11.06.2024 செவ்வாய்க்கிழமை மாலை பங்குத்தந்தையின் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டன.

17. **பேராலயப் பங்கு மேய்ப்பு பணிப் பேரவையின் பொதுக்குழு கூட்ட**மானது 14.06.2024 வெள்ளிக்கிழமை மாலை 07.15 மணிக்கு அந்தோணியார் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. பெருவிழா தொடர்பான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

18. 16.06.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 06.30 மணி திருப்பலியின் முடிவில் நமது பங்கைச் சார்ந்த பத்தாம் மற்றும் பதினொன்றாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களுக்கு பதக்கமும், ஊக்கப் பரிசும் வழங்கப்பட்டன.

19. நமது பங்கின் அடைக்கல அன்னை அவை இல்லத்திற்குப் புதிதாக வந்துள்ள அருள்சகோதரி கரோலின், சகோ. அமலோற்பவம், சகோ. ஜெயந்தி, சகோ. மரிய கார்மெல், நால்வருக்கும் பங்கு மக்கள் சார்பாக வரவேற்பு வழங்கப்பட்டது.

20. 16.06.2024 முதல் **ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள்** மீண்டும் தொடங்கப்பட்டன. 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அனைத்து மாணவ, மாணவியர்களும் ஞாயிறு மறைக்கல்வி வகுப்பில் கலந்து கொண்டார்கள்.

## பங்கில் நிகழ்ந்தவை



*வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 1. | லியம் ஜியோஃபிரி | கேண்டத் -தெரசா லிமோஷா | 26.05.2024 | குழந்தை தெரசா |
| 2. | ஆஸ்டின் மேத்யூ | லொயோலா-ரோசரின் சூர்யா | 26.05.2024 | அன்னை தெரசா |
| 3. | டியானா | தினேஷ் - ஆக்னஸ் | 09.06.2024 | பரிபூரண மாதா |
| 4. | தொரான் | பிரசாந்த் - சகினா | 16.06.2024 | பனிமயம் |



*வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 1. | டக்லஸ் ஹமில்ட்டன் | அண்டோ மோத்தா - டெய்சி | 08.06.2024 | இராயப்பர் |
| 2. | மரிய ஃபியோனா | அண்டோ மோத்தா - டெய்சி | 08.06.2024 | இராயப்பர் |
| 3. | ஷர்ரோன் பர்னான்டோ | சுதாகர் - பபிதா | 15.06.2024 | பொம்பெய் மாதா |
| 4. | நானிசா | ஜூடு - லொரிட்டா | 15.06.2024 | திருச்சிலுவை |
| 5. | ஆஸ்லி | அருண்குமார் -இன்பென்டா | 16.06.2024 | சிறுமலர் |



*ஆசீ கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 1. | ரெபின்ஸ்டன் - ஸ்ரைன் மோனிஷா | காவல்தூதர் | 09.06.2024 |
| 2. | கெய்சன் - சைனி சிமி | சிந்தாத்திரை மாதா | 17.06.2024 |



### செபிக்கின்றோம்

## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 1. | அந்தோணி அஸ்விந்த் | ஜெகதீஷ் | 17.05.2024 | அன்னை தெரசா |
| 2. | ஜான்சன் | டெனி | 24.05.2024 | லூர்து மாதா |
| 3. | மேரி அனுலா | அந்தோணி செல்லப்பன் | 24.05.2024 | சூசையப்பர் |
| 4. | விசுவாசம்மாள் | டெல்வர் | 03.06.2024 | செபமாலை மாதா |
| 5. | கொன்சீசா மச்சாடோ | ஆல்வின் மச்சாடோ | 18.06.2024 | காவல் தூதர் |

## நடைபெறவிருப்பவை

★ 05.07.2024 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.

★ 06.07.2024 மாதத்தின் முதல் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 01. | 02.07.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் | ஆவியின் கனி: மகிழ்ச்சி |
| 02. | 09.07.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆவியின் கனி: பொறுமை |
| 03. | 16.07.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | ஆவியின் கனி: அமைதி |
| 04. | 23.07.2024 | செவ்வாய் | அருள்பணி. பெப்பி | ஆவியின் கனி: தன்னடக்கம் |
| 05. | 30.07.2024 | செவ்வாய் | பனிமய அன்னை பெருவிழா நாள்கள் | |

# பேராலய மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் வாழ்த்துக்கள்






நமது பேராலயப் பங்கானது தூத்துக்குடி மறைவட்டத்தில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மறைக்கல்வி செயல்பாடுகளில் முதன்மைப் பரிசு பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் மறைமாவட்டத்திலேயே முதன் முறையாக "ஞாயிறு மறைக்கல்வி மாணவர் மலர்" என்ற மலரை நம் பேராலயப் பங்கில்தான் வெளியிட்டிருக்கிறோம் என்பதிலும் பெருமை அடைகிறோம்.

கடந்த கல்வி ஆண்டில், மறைவட்ட அளவில் முதன்மைப் பரிசு பெறுவதற்காகவும், மறைக்கல்வி மலர் வெளியிடப்படுவதற்காகவும் உழைத்திட்ட நம் முன்னாள் பங்குத் தந்தையர்களுக்கும், அருட்சகோதரர்க்கும், இணைந்து உழைத்திட்ட ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய ஞாயிறு மறைக்கல்வி மாணவச் செல்வங்களுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றியுடனும், வாழ்த்துக்களுடனும்,

**பேராலய பங்குத் தந்தையர்**
**அருட்சகோதரர், இறைமக்கள்.**

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஆண்டவரோடு இணைந்த நிலையில் இருப்போர் பேறுபெற்றோர் (திபா 14:13)



பிறப்பு
21.05.1956

இறப்பு
24.07.2023

## பிரமிளா பர்னாந்து

உன்னை மீண்டும் குழந்தையாக சுமக்க
எங்களுக்கு வரம் தந்த உனக்கு நன்றி அம்மா...

உன் வலிகளை எழுத வார்த்தைகள் இல்லை அம்மா...

உன் நினைவுகள் இல்லாத எங்கள் இருப்பிடமும் இல்லை அம்மா...

உன்னை மறக்க முடியாத எங்கள் மனதுக்கு ஆறுதல் கடைசியாக
பேசி சிரித்த வார்த்தைகள் மட்டும்தான் அம்மா...

உன்னால் நான் பெற்ற ஞானம் ஒன்றுதான் அம்மா...

தாய் தந்தையின் கடைசி காலத்தில் அவர்களை அலட்சியம் செய்யாதே...

என் அழகு பெத்தாரு மீண்டும்
உன் புன்னகை காண வேண்டும் நான்...

# நான்காம் ஆண்டு
# நினைவு அஞ்சலி



பிறப்பு
09.05.1945

இறப்பு
28.07.2020

துபாய்

## P. மைக்கேல் பர்னாந்து

வயது : 75

நான்காண்டுகளைக் கடந்து விட்டேன்.
நிலையான நினைவுகளைச் சுமந்து பயணிக்கிறேன்.

மனைவி
**சேசம்மாள் பி. ராயர்**

# தூத்துக்குடி

# புனித பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்



ஏழுகடல் துறையுடன் எல்லார்க்கும்
ஏக அடைக்கலத் தாய்
திவ்விய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்
442ஆம் ஆண்டு

SHRINE BASILICA OF OUR LADY OF SNOWS * TUTICORIN *

## பெருவிழா சிறப்பு நிகழ்வுகள் - 2024

"இவரே உம் தாய்" (யோவா 19:27)

| | | | | |
|---|---|---|---|---|
| 25.07.2024 | வியாழன் | மாலை | 06.00 மணி | சிறப்பு கொடிப் பவனி |
| 26.07.2024 | வெள்ளி | காலை | 07.00 மணி | கூட்டுத் திருப்பலி, கொடியேற்றம் |
| | | நண்பகல் | 12.00 மணி | அன்னைக்குப் பொன் மகுடம் அணிவித்தல் |
| 28.07.2024 | ஞாயிறு | காலை | 07.30 மணி | புதுநன்மைத் திருப்பலி |
| | | மாலை | 06.15 மணி | திவ்ய நற்கருணை பவனி |
| 04.08.2024 | ஞாயிறு | இரவு | 07.00 மணி | பெருவிழா மாலை ஆராதனை - மேதகு ஆயர் ஸ்டீபன் |

## 05.08.2024 திங்கள் பெருவிழா

| | | |
|---|---|---|
| காலை | 04.30 மணி | முதல் திருப்பலி |
| காலை | 05.30 மணி | 2-ஆம் திருப்பலி |
| காலை | 07.30 மணி | திருவிழாத் திருப்பலி – மேதகு ஆயர் ஸ்டீபன், தூத்துக்குடி |
| காலை | 09.00 மணி | 4-ஆம் திருப்பலி – பேரருள்திரு. ரவிபாலன், மறைமாவட்ட முதன்மைக்குரு |
| காலை | 10.00 மணி | 5-ஆம் திருப்பலி – மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ், பணி நிறைவு |
| நண்பகல் | 12.00 மணி | 6-ஆம் திருப்பலி – மண்ணின் மைந்தர்கள் |
| மாலை | 03.00 மணி | செபமாலை, அருளிக்க ஆசீர் |
| மாலை | 05.00 மணி | 7-ஆம் திருப்பலி – மேதகு ஆயர் அந்தோனிசாமி, பாளை. |
| இரவு | 07.00 மணி | புனித பனிமய அன்னையின் திருவுருவப் பவனி |
| இரவு | 10.00 மணி | புனித பனிமய அன்னைக்கு குடும்பங்களை ஒப்புக் கொடுத்தல் |

**நவநாட்களில்**

காலை 04.30 : செபமாலை - தொடர்ந்து திருப்பலிகள்
மாலை 03.00 : செபமாலை, மறையுரை, அருளிக்க ஆசீர் (தேர்ஸ்)
இரவு 07.15 : செபமாலை, பிரார்த்தனை, நற்கருணை ஆசீர்

அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்

பங்கு மேய்ப்புப் பணிக்குழு
துறவியர், பக்த சபையினர்
இறைமக்கள்

அருள்பணி. ஸ்டார்வின், பங்குத்தந்தை
அருள்பணி. பாலன், உதவிப் பங்குத்தந்தை
அருள்சகோ. தினகரன்

Ph. 0461-2320854, 8220947823 www.snowsbasilica.com

SHINY Ph : 98421 31493